DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Producer)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender

Miscellaneous                    Case No. C.C.194/2020

Preliminary Register             P.W. 1

Sessions

Prosecution

Deposition of Witness for        Defence

Court

Name : Samraj

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.09.2021.

**முதல் விசாரணை** -

நான் மேக்காமண்டபத்தில் வசிக்கிறேன். கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியாது. 29.08.2018ம் தேதி இரவு 1.00 மணி அளவில் மேக்காமண்டபத்தில் உள்ள என் வீட்டு பக்கம் எனது Maruthi 800 Car வண்டி எண் ஞாபகமில்லை. சாலை ஓரத்தில் நிறுத்தியிருந்தேன். அப்போது குரசேகரத்தில் இருந்து அழகியமண்டபம் நோக்கி இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் அமர்ந்து வந்து எனது காரில் மோதினார்கள் சத்தம் கேட்டு தூங்கி

கொண்டிருந்த நான் வெளியே வந்தேன். அடிபட்டவர்களை காரில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இது சம்பந்தமாக போலீசில் புகார் மனு அளித்தேன். புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.

குறுக்கு விசாரணை

தற்போது நீதிமன்றத்தில் சொல்லியுள்ளது போல்தான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. அருகில் உள்ளவர்கள் சொன்னதை வைத்து புகார் மனு அளித்தேன்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Producer)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender

Miscellaneous Case No. C.C.194/2020

Preliminary Register P.W. 2

Sessions

Prosecution

Deposition of Witness for Defence

Court

Name : Kingsly

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.09.2021.

**முதல் விசாரணை** -

நான் வெண்டலிகோட்டில் வசிக்கிறேன். ஓட்டுனராக வேலை பார்க்கிறேன். 30.08.2018 ம் தேதி மேக்காமண்டபத்தில் வைத்து கொற்றிகோடு போலீசார் சம்பவ இடத்தில் விசாரித்து வரைபடம் வரைந்தனர். சாட்சியாக இருக்க சொல்லி கையொப்பம் கேட்டனர். கையொப்பம் போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். இது குறித்து போலீசார் என்னிடம்

விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

வெண்டலிகோட்டிற்கும் மேக்காமண்டபத்திற்கும் சுமார் 15 கி.மீ. தூரம் இருக்கும். கையெழுத்து போட்ட சமயத்தில் மேக்காமண்டபத்திற்கு எதற்கு வந்தேன் என்று போலீசார் கேட்கவில்லை. நான் சொல்லவில்லை. கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று படித்தேனா என்றால் போலீசார் என்ன எழுதியுள்ளது என்று சொன்னார்கள். கையெழுத்து போட்டேன். மொத்தம் ஒரு தாளில் கையெழுத்து போட்டேன். கையெழுத்து போட்ட பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.